**தேசிய கல்வி நிறுவகம்**
**மேலதிக மொழி விருத்தி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2021**

# Diploma in Additional Language Improvement programme - 2021

**சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்**

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகள்**

- க.பொ.த உயர்தரத்தில் குறைந்தபட்சம் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

- அரச பாடசாலை / அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் / பிரிவேனா பாடசாலைகளில் கடமைபுரியும் பரிவேனாதிபதி, ஆசிரியர்கள் / பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**பாடநெறியின் இயல்பு**

- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு தமிழ் கற்கைநெறியும், தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு சிங்கள கற்கைநெறியும் சிங்கள, தமிழ், மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கிலக் கற்கைநெறியும் நடாத்தப்படும்.
- நிகழ்நிலை மூலமாக (Online) கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**பாடநெறியின் காலம்**

- கற்கைநெறியின் காலம் ஒரு வருடம்
- வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் பகுதிநேர பாடநெறியாகும்.

**பாடநெறிக் கட்டணம்**

- விண்ணப்பிக்கும் கட்டணம் ரூ 500/-, பதிவுக் கட்டணம் ரூ 1000/- பாடநெறிக் கட்டணம் ரூ. 30000/- (இரு தவணைகளில் ரூ 15000/- வீதம் செலுத்தலாம்)
- நிறுவனத்தால் தீர்மானிக்கப்படும் இறுதிப் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

2021.ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் லிங்கை கிளிக் செய்து Google படிவத்தினைப் பூரணப்படுத்துவதன் ஊடாக விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கவும்.

https://forms.gle/CjnfNhcuJ1mzxuEw5

**கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.